सत्यमेव जयते

# GST

## சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

# சப்கா விஷ்வாஸ் (பழைய பூசல்கள் தீர்வு) திட்டம், 2019



"சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தற்போது இரண்டு ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமல்படுத்தப்படுவதற்கு முந்தைய காலத்தில் இருந்து நாம் வைத்திருக்கும் அதிக அளவிலான தேங்கியிருக்கும் வழக்குகள் தான் என்னை உடனடியாக அக்கறை காட்டச் செய்யும் பகுதி ஆகும். ரூ. 3.75 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகை சேவைகள் வரி மற்றும் கலால் வரி தொடர்பான வழக்குகளில் முடங்கியுள்ளது. இந்தச் சுமையை இறக்கி வைத்து வணிக நடவடிக்கைகளைத் தொடரச் செய்வதற்கான தேவை தற்போது எழுந்துள்ளது. எனவே, நான், இந்த வழக்குகளை விரைந்து முடிக்கும் பொருட்டு பழைய பூசல்களைத் தீர்க்கும் திட்டம் ஒன்றை முன் வைக்கிறேன். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பழைய வழக்குகளில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும்படி தொழில் மற்றும் வணிகத்தில் ஈடுபட்டிருப்போரைக் கேட்டுக் கொள்கிறேன்."

# அறிமுகம்

சப்கா விஷ்வாஸ் (பழைய பூசல்கள் தீர்வு) திட்டம் என்பது பழைய மத்திய கலால் மற்றும் சேவை வரி பூசல்களை முடித்து வைப்பது மட்டுமல்லாமல் அறிக்கை அளிக்கத் தகுதி படைத்த நபர் செலுத்தாமல் இருக்கும் வரிகளை வெளியிடச் செய்யும் ஒருமுறை நடவடிக்கை ஆகும். இந்தத் திட்டம் பின்னர் குறிப்பிடப்படும் தேதி முதல் மத்திய அரசால் நடைமுறைப் படுத்தப்படும். இந்தத் திட்டம், தகுந்த நபர்கள் தங்கள் வரி நிலுவைகளை வெளிபடுத்தவும் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்தவும் வழி செய்கிறது. மேலும் இத்திட்டம் அறிவித்த வரி பாக்கியை செலுத்தும் நபர்களுக்கு மத்திய கலால் வரிச் சட்டம், 1994 அல்லது நிதிச்சட்டம் ,1994 அத்தியாயம் 5 ஆகிய சட்டங்களில் குறிப்பிட்டுள்ள அபராதம், வட்டி மற்றும் பிற நடவடிக்கைகளிலிருந்து தடைக்காப்பு வழங்குகிறது.

# இத்திட்டத்தின் நோக்கங்கள்

- மத்திய கலால் வரி, சேவை வரி மற்றும் 26 பிற மறைமுகவரி சட்டங்களின் கீழ் உள்ள பழைய வரி பூசல்களை தன்னிச்சையாக வெளிப்படுத்தத் தூண்டுவது.
- தகுதி பெற்ற நபர்கள் தங்களால் செலுத்தப்பட வேண்டிய வரி நிலுவைகளை வெளிபடுத்தவும், திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வண்ணம் அவற்றைச் செலுத்தவும் ஏற்பாடு செய்வது.
- அறிவிக்கப்பட்ட வரி பாக்கியைச் செலுத்தும் தகுதி பெற்ற நபர்களுக்கு அபராதம், வட்டி, குற்றவியல் நடவடிக்கை உள்ளிட்ட மேல் நடவடிக்கைகளில் இருந்து தடைக்காப்பு வழங்குவது.

மறுசுழற்சி செய்யப்பட்ட காகிதத்தில் அச்சிடப்பட்டது

## இத்திட்டத்தின் கீழ் வரும் பூசல்களின் வகைகள்

செய்ய வேண்டிய கால அளவுக்குள், மேல்முறையீடு செய்யாத, வரி செலுத்தும் நபரின் வரி நிலுவைகள்

எந்த ஒரு மேல் முறையீட்டு மன்றத்திலும் இறுதி முடிவிற்கு வரும் நிலையில் உள்ள எந்த ஒரு வரி தொடர்பான பூசல்

30.06.2019 அன்றோ அதற்கு முன்னரோ தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்ட வரி கடப்பாடு.

## யாரால் இத்திட்டத்தின் கீழ் விளம்புகை அளிக்க இயலாது?

மேல் முறையீட்டு மன்றத்தில் உள்ள வழக்கு 30.06.2019 அன்றோ அதற்கு முன்னரோ இறுதி விசாரணை முடிவடைந்திருந்தால் அத்தகைய நபர்.

எந்த ஒரு மறைமுகவரி சட்டத்தின் கீழும் தாம் விளம்புகை தாக்கல் செய்ய நினைக்கும் விவகாரத்தில் ஏற்கனவே தண்டிக்கப்பட்ட ஒருவர்.

காரணம் காட்டுமாறு கோரும் அறிவிக்கை பெற்று 30.06.2019 அன்றோ அதற்கு முன்னரோ அதன் மேல் இறுதி விசாரணை முடிவடைந்திருந்தால் அத்தகைய நபர்.

தவறுதலாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டது தொடர்பான காரணம் காட்டுமாறு கோரும் அறிவிக்கை பெற்றவர்.

விசாரணை அல்லது ஆய்வு அல்லது தணிக்கைக்கு உட்பட்டு அது தொடர்பான வரித் தொகை 30.06.2019 அன்றோ அதற்கு முன்னரோ கணக்கிடப்படாதிருந்தால் அத்தகைய நபர்.

தீர்வு ஆணையத்தில் வழக்கின் தீர்வுக்கு மனு செய்தவர்.

மத்திய கலால் சட்டத்தின் நான்காவது இணைப்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கலால் வரிக்குட்பட்ட பொருட்கள் தொடர்பாக விளம்புகை அளிக்க நினைக்கும் நபர்.

விசாரணை அல்லது ஆய்வு அல்லது தணிக்கைக்கு உட்பட்டு அதன் பின் தன்னிச்சையாக வெளிப்படுத்தல் செய்யும் நபர் அல்லது செலுத்தப்பட வேண்டிய வரி விபரம் அடங்கிய அறிக்கை தாக்கல் செய்து வரியை செலுத்தாமல் இருக்கும் நபர்.

# இத்திட்டத்தின் கீழ் உள்ள நிவாரணம்

| வரி நிலுவைகள் | காரணம் காட்டுமாறு கோரும் அறிவிக்கை (அ) ஒன்று (அ) மேற்பட்ட மேல்முறையீடுகள் 30.06.2019 வரை | விசாரணை (அ) புலனாய்வு (அ) தணிக்கையால் கணக்கீடு 30.06.2019 வரை | நிலுவையில் உள்ள செலுத்தப்படாத தொகை | அறிக்கையின் படி செலுத்தப்பட வேண்டிய தொகை | வரி கட்டிய (அ) இல்லா மற்றும் தாமதக் கட்டணம் (அ) அபராதத்திற்கு மட்டும் கொடுக்கப்பட்ட காரணம் காட்டுமாறு கோரும் அறிவிக்கை | தன்னிச்சையாக வெளிப்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| தொகை ரூ. 50 லட்சம் வரை | 70 % | 70 % | 60 % | 60 % | கட்டணம் முழுவதும் (அ) அபராதம் | நிவாரணம் கட்டணம் (அ) அபராதத்திற்கு மட்டும். வரிக்கு நிவாரணம் இல்லை |
| தொகை ரூ. 50 லட்சத்திற்கு மேல் | 50 % | 50 % | 40 % | 40 % | | |

# வரி நிலுவைகள்

30.06.2019 அன்று மேல் முறையீட்டு மன்றம் முன்பு நிலுவையில் உள்ள ஓர் ஆணையின் மீது எழும் ஒற்றை மேல் முறையீடு பொறுத்தமட்டில், மேற்சொன்ன மேல்முறையீட்டில் பூசலிலுள்ள வரியின் மொத்தத் தொகை.

30.06.2019 அன்று மேல்முறையீடு மன்றம் முன்பு நிலுவையில் உள்ள ஓர் ஆணையின் மீது எழும் ஒன்றுக்கு மேலான மேல்முறையீடுகள் ( ஒன்று விளம்புகையாளரால் மற்றொன்று துறையினரால்) பொறுத்தமட்டில், விளம்புகையாளரின் மேல்முறையீடு மற்றும் துறையின் மேல்முறையீடு ஆகியவற்றின் பூசலிலுள்ள வரித் தொகையின் கூட்டுத் தொகை.

30.06.2019 அன்றோ அல்லது அதற்கு முன்போ, விளம்புகையாளர் மறைமுகவரி சட்டத்தின் கீழ் காரணம் காட்டுமாறு கோரும் அறிவிப்பை பெற்றபின், அந்த அறிவிப்பில் விளம்புகையாளரால் செலுத்தப்பட வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ள வரித் தொகை.

விளம்புகையாளருக்கு எதிராக விசாரணையோ அல்லது புலனாய்வோ அல்லது தணிக்கையோ நிலுவையில் இருக்குமிடத்து 30.06.2019 அன்றோ அல்லது அதற்கு முன்போ கணக்கீடு செய்யப்பட்ட ஏதாவது மறைமுக வரிச் சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரியின் தொகை.

விளம்புகையாளர் தன்னிச்சையாக தொகையை வெளிப்படுத்தி இருக்குமிடத்து, விளம்புகையில் கூறப்பட்டுள்ள வரியின் மொத்தத் தொகை.

விளம்புகையாளர் சம்பந்தப்பட்ட நிலுவையில் உள்ள செலுத்தப்படாத தொகை இருக்குமிடத்து, நிலுவையில் உள்ள அத்தகைய செலுத்தப்படாத தொகை.

## இத்திட்டத்தின் கீழ் தன்னிச்சையாக வெளிப்படுத்துதல்

- வரி செலுத்துவதில் நிவாரணத்திற்கு தகுதி கிடையாது ஆனால் வட்டி மற்றும் அபராதத்தில் நிவாரணம் அளிக்கப்படும்.
- சுட்டியமர்த்தப்பட்ட குழுவினரால் சரிபார்த்தல் கிடையாது.
- ஒரு ஆண்டு காலத்திற்குள் (தவறான தகவல்கள் அளிக்கப்பட்டது அறியப்பட்டால்), தகுந்த நடவடிக்கைகள் தொடங்கப்படும்.

## குறிப்புரை

ஒரு வரி செலுத்துபவர் பின்வரும் நிகழ்வுக்கு பிற்பாடு இத்திட்டத்தின் கீழ் தன்னிச்சையாக வெளிப்படுத்துதல் இயலாது - விசாரணை அல்லது புலனாய்வு அல்லது தணிக்கை அல்லது அத்தகைய நடவடிக்கைகளுக்குப் பின் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், செலுத்த வேண்டியது என்று விளம்புகை செய்யப்பட்ட ஒரு தொகை, ஆனால் செலுத்தப்படாதது.

## சுட்டியமர்த்தப்பட்ட குழு மற்றும் அதன் பங்கு

1. மின்னணு வடிவத்தில் விளம்புகையாளர் விளம்புகையை சமர்ப்பித்த பின், சுட்டியமர்த்தப்பட்ட குழு விளம்புகையின் உண்மைத்தன்மையை சரி பார்க்கும்.
2. விளம்புகை மற்றும் மதிப்பிடப்பட்ட தொகையை சரி பார்க்கப்பட்ட பின்பு, 60 நாட்களுக்குள் மின்னணு வடிவத்தில் ஒரு விவர அறிக்கை அளிக்கப்படும்.
3. செலுத்தவேண்டிய தொகையின் விவர அறிக்கை அளிக்கும் முன், ஒரு நேர்க்கேட்பு தரப்படும்.
4. தரப்பு வாதத்தை கேட்ட பின், செலுத்த வேண்டிய தொகையை சுட்டிக்காட்டும் மின்னணு விவர அறிக்கையொன்று 60 நாட்களுக்குள் அளிக்கப்படவேண்டும்.
5. விளம்புகையாளர் 30 நாட்களுக்குள் கணினி வழியாக தொகையைச் செலுத்த வேண்டும்.
6. பணம் செலுத்தியவுடன் மற்றும் மேல்முறையீட்டை திரும்பப் பெற்றுக்கொண்டதற்கான சான்றினை அளித்தவுடன், அக்குழு 30 நாட்களுக்குள் விடுவிப்புச் சான்றிதழ் அளிக்க வேண்டும்.

# இத்திட்டத்தின் கட்டுப்பாடுகள்

**இத்திட்டத்தின் கட்டுப்பாடுகள்**

- செலுத்தப்பட வேண்டிய வரிகளை உள்ளீட்டு வரி வரவு கணக்கிலிருந்து செலுத்த இயலாது.
- செலுத்தப்பட்ட வரியை உள்ளீட்டு வரி வரவாக எடுத்துக் கொள்ளமுடியாது அல்லது எந்த நபரும் , வரி விதிக்கத்தக்க சரக்குகள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்பவராக உள்ளீட்டு வரி வரவு எடுத்துக் கொள்ளும் உரிமை அளிக்காது.
- செலுத்தப்பட்ட வரி நிலுவைகள், எந்த சூழ்நிலைகளிலும் திருப்பிக்கொடுக்க கூடியதன்று.

# விடுவிப்புச் சான்றிதழ் அளித்த உடன்

❖ விளம்புகையாளர் மேலும் எந்த ஒரு வரி, வட்டி அல்லது அபராதம் இதில் உள்ளடங்கிய காலவரை மற்றும் காரணத்திற்காக கட்ட வேண்டிய கடப்பாடு இல்லை.

❖ வழக்கு வேறு எந்த ஒரு நடவடிக்கைக்கும் மறைமுகவரி சட்டத்தின் கீழ் மறுதிறப்புதலுக்கு உட்படுத்தப்படாது.

❖ தன்னிச்சையாக வெளிப்படுத்துதலில் தவறான விளம்புகை செய்யப்பட்டிருப்பின், தகுந்த சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் ஒரு ஆண்டு காலத்திற்குள் தொடங்கப்படும்.

உங்களுக்கு இது தொடர்பாகவோ அல்லது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சம்பந்தமாகவோ எந்த ஒரு தகவலோ அல்லது உதவியோ தேவைப்பட்டால் நேரிடையாகவோ தொலைபேசியிலோ அல்லது மின் அஞ்சல் வாயிலாகேவா அணுக வேண்டிய முகவரி:

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி உதவி மையம், சென்னை புறநகர் தலைமையக அலுவலகம், அண்ணா நகர், சென்னை.
தொலைபேசி: 26142850 , 26142851 , 26142852 & 26142853 .
மின்அஞ்சல் : sevakendra-outer-tn@gov.in

பொது நலன் கருதி வெளியிடுவோர்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மற்றும் மத்திய கலால் துறை
ஆணையர் அலுவலகம் ,சென்னை புறநகர்,
நியூரி வளாகம், நெ.2054 - I , 2 வது நிழல் சாலை, 12வது மெயின் ரோடு,
அண்ணா நகர், சென்னை - 600040 .
Email:gst.chennaiouter@gov.in